# செப்டம்பர் – 19 – புதன்

## புனித ஜனுவாரியுஸ்

## என்னிடம் அன்பு இல்லையேல் நான் ஒன்றுமில்லை
## 1 கொரி 13:2

### முதல் வாசகம் : 1 கொரிந்தியர் 12 : 31 – 13 : 13

சகோதர சகோதரிகளே நீங்கள் மேலான அருள்கொடையையே ஆர்வமாய் நாடுங்கள். எல்லாவற்றையும்விடச் சிறந்தநெறி ஒன்றை நான் உங்களுக்கு எடுத்துக் காட்டுகிறேன். நான் மானிடரின் மொழிகளிலும் வானதூதரின் மொழிகளிலும் பேசினாலும் அன்பு எனக்கில்லையேல் ஒலிக்கும் வெண்கலமும் ஓசையிடும் தாளமும் போலாவேன். இறைவாக்கு உரைக்கும் ஆற்றல் எனக்கு இருப்பினும், மறைபொருள்கள் அனைத்தையும் அறிந்தவனாய் இருப்பினும், அறிவெல்லாம் பெற்றிருப்பினும், மலைகளை இடம்பெயரச் செய்யும் அளவுக்கு நிறைந்த நம்பிக்கை கொண்டிருப்பினும் என்னிடம் அன்பு இல்லையேல் நான் ஒன்று மில்லை. என் உடைமையை எல்லாம் நான் வாரி வழங்கினாலும் என் உடலையே சுட்டெரிப்பதற்கென ஒப்புவித் தாலும் என்னிடம் அன்பு இல்லையேல் எனக்குப் பயன் ஒன்றுமில்லை. அன்பு பொறுமையுள்ளது. நன்மைசெய்யும் பொறாமைப்படாது. தற்புகழ்ச்சி கொள்ளாது. இறுமாப்பு அடையாது. அன்பு இழிவானதைச் செய்யாது. தன்னலம் நாடாது. எரிச்சலுக்கு இடம் கொடாது. தீங்கு நினையாது. அன்பு தீவினையில் மகிழ்வுறாது. மாறாக உண்மையில் அது மகிழும். அன்பு அனைத்தையும் பொறுத்துக் கொள்ளும் அனைத்தையும் நம்பும் அனைத்தையும் எதிர்நோக்கி இருக்கும் அனைத்திலும் மனஉறுதியாய் இருக்கும். இறைவாக்கு உரைக்கும் கொடை ஒழிந்துபோம் பரவசப்பேச்சு பேசும் கொடையும் ஓய்ந்துபோம் அறிவும் அழிந்துபோம். ஆனால் அன்பு ஒருபோதும் அழியாது. ஏனெனில், நமது அறிவு அரைகுறையானது நாம் அரைகுறை யாகவே இறைவாக்கும் உரைக்கிறோம். நிறைவானது வரும் போது அரைகுறையானது ஒழிந்துபோம். நான் குழந்தையாய் இருந்தபோது குழந்தையைப்போலப் பேசினேன் குழந்தையின் மனநிலையைப் பெற்றிருந்தேன் குழந்தையைப்போல எண்ணினேன். நான் பெரியவனானபோது குழந்தைக்குரியவற்றை அறவே விட்டுவிட்டேன். ஏனெனில் இப்போது நாம் கண்ணாடியில் காண்பதுபோல் மங்கலாய்க் காண்கிறோம் ஆனால் அப்போது நாம் நேரில் காண்போம். இப்போது நான் அரைகுறையாய் அறிகிறேன் அப்போது கடவுள் என்னை அறிந்துள்ளதுபோல் முழுமையாய் அறிவேன். ஆக, நம்பிக்கை, எதிர்நோக்கு, அன்பு ஆகிய மூன்றுமே நிலையாய் உள்ளன. இவற்றுள் அன்பே தலைசிறந்தது.

**பதில்பாடல் :** ஆண்டவர் தமது உரிமைச் சொத்தாகத்
தேர்ந்தெடுத்த மக்கள் பேறுபெற்றோர்.

### நற்செய்தி : லூக்கா 7 : 31 - 35

அக்காலத்தில் இயேசு, "இத்தலைமுறையின் மக்களை யாருக்கு ஒப்பிடுவேன்? இவர்கள் யாருக்கு ஒப்பானவர்கள்? இவர்கள் சந்தை வெளியில் உட்கார்ந்து ஒருவரை ஒருவர் கூப்பிட்டு "நாங்கள் குழல் ஊதினோம் நீங்கள் கூத்தாடவில்லை. நாங்கள் ஒப்பாரி வைத்தோம் நீங்கள் அழவில்லை" என்றுகூறி விளையாடும் சிறு பிள்ளைகளுக்கு ஒப்பானவர்கள். "எப்படியெனில், திருமுழுக்கு யோவான் வந்தார் அவர் உணவு அருந்தவுமில்லை திராட்சை மது குடிக்கவுமில்லை அவரை, "பேய் பிடித்தவன்" என்றீர்கள். மானிட மகன் வந்துள்ளார் அவர் உண்கிறார், குடிக்கிறார் நீங்களோ, "இம்மனிதன் பெருந்தீனிக்காரன், குடிகாரன், வரிதண்டுபவர் களுக்கும் பாவிகளுக்கும் நண்பன்" என்கிறீர்கள். எனினும் ஞானம் மெய்யானது என்பதற்கு அதை ஏற்றுக்கொண்டோரின் செயல்களே சான்று" என்றார்.

**தியானம்:** ஒருவரை ஒருவர் அன்பு செய்வதே கிறிஸ்த்தவ வாழ்வு. நம்மிடம் அன்பு இல்லை என்றால் நாம் ஒன்றுமே இல்லாதவர்கள். கடவுள் நம்மீது கொண்ட அன்பினால் தமது சாயலாக நம்மைப் படைத்தார். அவரின் கட்டளையை மீறியதால் மனுக்குலத்தை மீட்க தமது மகனை உலகிற்கு அனுப்பினார். அவரின் இரத்தம் எம்மை மீட்டது. இவ்வாறான அன்பை நாம் யாரிடம் காணமுடியும். இன்று வெளிவேடமான அன்பை நம்பி பலர் ஏமாந்து போகின்றார்கள். அதனால் உடல் உளபாதிப்பை அடைகின்றார்கள். தாங்கமுடியாமல் தற்கொலை செய்து கொள்கிறார்கள். விலைமதிப்பற்ற அன்பு இன்று பலவழிகளில் விலை பேசப்படுகின்றது. அன்பிற்காக ஏங்குவோர் இன்று அதிகம். அன்பை மட்டுமே கொடுத்த பெற்றோர் இன்று பிள்ளைகளால் கைவிடப்படுகின்றார்கள். பணத்தை சுகபோகவழ்வை நாடிஓடுகின்ற பெற்றொருக்கு பிள்ளைகளாகப் பிறந்தவர்கள் அன்பை தேடுகின்றார்கள். இறுதியில் போதைப் பொட்களின் அடிமைகளாக மாறுகின்றார்கள். சமுதாயத்தில் இடம்பெறும் குற்றச்செயல்களை புரிகின்றவர்களில் அதிகமானவர்கள் இளம் பராயத்தினரே. இதற்குகாரணம் நாமா? கடவுளா? பணம் நமக்கு தேவைதான், ஆனால் அதற்காக நாம் கொடுக்கும் விலை அதிகம். குடுப்பத்தினருடன் உறவாட, பிள்ளைகளுடன் இருக்க நேரம் இல்லை. அதனால் அதிகம் பாதிப்படைபவர்கள் பிள்ளைகளே. பிள்ளைகளுக்காக வாழ்கின்றோம் என்று நினைத்துக் கொண்டு அவர்களின் வாழ்வை, விருப்பங்களை நாம் குழி தோண்டிபுதைக்கலாமா? சின்ன சின்னஆசைகளைக கூட நிறைவேற்ற முடியாமல் காலால் நசுக்கலாமா? குறை கூறுவதும் குற்றம் சாட்டுவதும் கூட அன்பற்ற செயலே. இதனை இயேசு இன்றைய நற்செய்தியில் கடிந்து கொள்வதை நாம் பார்க்கலாம். எனவே சிந்திப்போம். எம்மால் முடிந்தளவு எம்மை சார்ந்தவர்களை, மற்றவர்களை அன்பு செய்து வாழ முயற்சி எடுப்போம்.